# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய தொழிற்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டம்

---

*[1991, யூலை மாதம் 10 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1991 யூலை 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 90* *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1991 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய தொழிற்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டம்

[1991, யூலை 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. —ஓ. 87/90
3013

1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, தேசிய தொழிற்துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசிய தொழிற் துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப் பீடு செய்யப்படும்) 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க தேசிய தொழிற் துறை முகாமைப் பயிற்சி நிறுவகச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரி வின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1976 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள், தொழில் முகாமை அபி விருத்தியும்; அத்துடன் குறிப்பாகப் பின்வரும் விடயங்களுமாதல் வேண்டும்:—

(அ) தொழில் முகாமைக் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்பாடுசெய்தலும் அவற்றை மேம்படுத்துதலும்;

(ஆ) முகாமை ஆலோசனை; அத்துடன் மதியுரைச் சேவைகளுக்கு ஏற்பாடுசெய்தல்;

(இ) உற்பத்தித் திறனின் சீர்திருத்தத்தை இயலச்செய்தல்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் பந்தி (ஆ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

"(ஆ) முகாமை அபிவிருத்திப் பயிற்சிக் கல்வி நிலையங்களைத் தாபித்து அவற்றை நடாத்தலாம்;

(2) அப்பிரிவின் பந்தி (ஆ) வை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:—

(ஆஅ) தொழில் முகாமை அத்துடன் அதனோடு தொடர்புள்ள பாடங்களிலான பயிற்சிநெறிகளுக்கு ஏற்பாடு செய்ய லாம்;

(ஆஆ) நிறுவகம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறை யிலும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது அதிகார நிலையங்களுடன் ஒன்றிணையலாம்;

(ஆஇ) நிறுவகத்தில் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிகளைப் பின்பற்றியுள்ள ஆட்களுக்குத் திப்புளோமாக்களையும் மற்றும் பிற கல்விசார் உயர்பேறுகளையும் வழங்கலாம்; அத்துடன் அளிக்கலாம்;

(ஆஈ) தொழில் முகாமைக் கல்விக்கான ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்களைப் பதிவு செய்யலாம்;"

(3) பந்தி (ஓ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஓ) தொழில் முகாமைக் கல்வி அத்துடன் நிறுவகத்தின் பொது நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்கலாம்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"ஆளும் பேரவையின் அமைப்பு.

6. (1) நிறுவகமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதும், (இதன்பின்னர் இச்சட்டத்தில் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) ஆளும் பேரவை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) பதவி வழி உறுப்பினர்கள் எட்டுப்பேர்; அதாவது—

(i) 16 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி;

(ii) பட்டப் பின்படிப்பு முகாமை நிறுவகத்தின் பணிப்பாளர்;

(iii) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தலைவர்;

(iv) முகாமைக் கணக்காளர்களின் பட்டய நிறுவகத்தினது தலைவர் (இலங்கையின் பிரிவு);

(v) 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தற் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் கைத்தொழில்கள் மதியுரைப் பேரவையின் தவிசாளர்;

(vi) வர்த்தக வங்கிகள் கழகத்தின் தவிசாளர்;

(vii) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர்;

(viii) 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர்;

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய மூன்று உறுப்பினர்கள்; இவர்களில் இருவர் தொழில் முகாமையில் ஆகக்குறைந்தது பத்தாண்டு அனுபவம் உள்ளோராகவும், உயர்மட்ட முகாமையில் உயர் பேறுகளைப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்; மற்றையவர் கைத்தொழில் உறவுகளிலும் அத்துடன் தொழிற் சங்க நடவடிக்கைகளிலும் ஆகக்குறைந்தது பத்தாண்டு அனுபவம் உள்ளவராகவும் அத்துறையில் உயர்பேறு பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி நீங்கலாகப் பேரவை உறுப்பினர்களுள் ஒருவரைத் தவிசாளராக அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(3) ஆளும் பேரவையின் தவிசாளரானவர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவருடைய பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிவதற்கு இயலாதவராகவிருந்தால், அமைச்சரானவர் ஆளும் பேரவையின் வேறோர் உறுப்பினரை அவருடைய இடத்தில் செயலாற்றவெனப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(4) அமைச்சரானவர் அதற்கான காரணம் எதனையும் காட்டாமல், தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.

(5) தவிசாளரானவர், அமைச்சருக்கு முகவரியிடப்படும் கடிதமொன்றின் மூலம் எந்த நேரத்திலும் பதவிதுறக்கலாம். அமைச்சரால் எழுத்து மூலம் அப்பதவிதுறத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டதன்மேல் அத்தகைய பதவி துறத்தல் பயனுறுவதாதல் வேண்டும்.

(6) உட்பிரிவுகள் (4), (5) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தவிசாளரின் பதவிக்காலம் ஆளும் பேரவையில் அவருடைய உறுப்பாண்மைக் காலமாயிருத்தல் வேண்டும்.

(7) பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆள் ஒருவர் பேரவையின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:—

(அ) அவர் பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாணசபை உறுப்பினராக இருந்தால் அல்லது அத்தகைய உறுப்பினரானால்; அல்லது

(ஆ) நிறுவகத்தால் அல்லது நிறுவகத்தின் சார்பாகச் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நலனை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால்; அல்லது

(இ) பேரவையின் ஓர் உறுப்பினர் என்றவகையில் அவருடைய பணியை நிறைவேற்றுவதைப் பங்கமான முறையில் பாதிக்கக் கூடியதான ஏதேனும் அத்தகைய நிதி அல்லது பிற அக்கறையை அவர் கொண்டிருந்தால்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்

"(1) ஆம் உட்பிரிவின்கீழ்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன்கீழ்" என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) வில் "ஓராம் உட்பிரிவின்கீழ்" என்ற சொற்களுக்குப் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன்கீழ்" என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஓராம் உட்பிரிவின் கீழ்" என்ற சொற்களுக்குப் பதிலாக " (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ் " என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " (1) ஆம் உட்பிரிவின் கீழ்" என்ற சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக " (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ்" என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, "சபை உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஆறாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் ஒருவர்" என்ற சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, "தனது பதவியைத் துறப்பவரான உறுப்பினர் எவரும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "6ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ) இன் கீழ் நியமிக்கப்பட்டு பதவி துறக்கும் பேரவையின் ஓர் உறுப்பினர்" என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9 முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "ஐந்து உறுப்பினர்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நான்கு உறுப்பினர்கள்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 15அ எனப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் 15 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"தொழில் முகாமைக் கல்விச்சபை ஒன்றை அமைத்தல்.

15அ. (1) (அ) தொழில் முகாமைக் கல்வி தொடர்பிலான எல்லாக் கருமங்களின் மீதும் பேரவைக்கு ஆலோசனை அளிக்கவும்; அத்துடன்,

(ஆ) பேரவையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தின் மீது அறிக்கையிடவும்,

நிறுவகத்தின் தொழில் முகாமைக் கல்விச் சபை ஒன்று தாபிக்கப்படல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி தொழில் முகாமைக் கல்வி சபையின் தவிசாளராதல் வேண்டும்.

(3) தொழில் முகாமைக் கல்வி தொடர்பான ஏதேனும் கருமத்தின் மீது தீர்மானம் எடுப்பதற்கு முன் பேரவையானது தொழில் முகாமைக் கல்வி சபையைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(4) தொழில் முகாமைக் கல்விச் சபையின் அமைப்பு, அதன் உறுப்பினரின் நியமன முறை, அதன் உறுப்பினர்களது பதவிக் காலம் என்பன தொடர்பாகப் பேரவையானது விதிகளை ஆக்குதல் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதியை நியமித்தல்.

16. (1) பணிப்பாளர் தலைமை அதிபதியே நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டுமென்பதுடன், பேரவையால் அவருக்குக் கையளிக்கப்படக் கூடியனவான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் அவர் நிறைவேற்றுதலும் வேண்டும் அல்லது புரிதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் பேரவையின் கலந்தாலோசனையுடனும், (3) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளையும் தெரிவுத் திட்டத்தையும் கவனத்திற் கொண்டும் ஒரு பணிப்பாளர் தலைமை அதிபதியை நியமித்தல் வேண்டும்.

(3) பேரவையானது அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணிப்பாளர் தலைமை அதிபதியின் பதவிக்கான தகைமைகளையும் தெரிவுத் திட்டத்தையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(4) அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய முதலாவது பணிப்பாளர் தலைமை அதிபதி தொடர்பாக உட்பிரிவுகள் (2), (3) என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது.

(5) பணிப்பாளர் தலைமை அதிபதியானவர், அவருடைய நியமனத் தேதியிலிருந்து ஐந்தாண்டு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) உரிய விசாரணையின் பின் பேரவையால் செய்யப்பட்ட விதப்புரையின் மேல் அமைச்சரானவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் தலைமை அதிபதியைப் பதவியினின்றும் அகற்றலாம் :—

(அ) அவருடைய கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக அவர் இயலாதவரானால்; அல்லது

(ஆ) நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கும் நலனுக்கும் வெளிப்படையாக எதிராகவுள்ள ஏதேனும் செயலை அவர் செய்திருந்தால்.

(7) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியதான அத்தகைய ஊதியம் பணிப்பாளர் தலைமைஅதிபதிக்கு வழங்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) நிறுவகத்தின் நோக்கத்திற்கு அவசியமாயிருக்கக் கூடியவர்களான அலுவலர்களையும் சேவையாளர்களையும் (முழுநேர அடிப்படையிலாயினுஞ்சரி பகுதிநேர அடிப்படையிலாயினுஞ்சரி) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.".

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் அல்லது பிற எழுத்திலான சட்டத்தின் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தால் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின், தொடர்பின், படிவத்தின் அல்லது வேறு ஆவணத்தின் ஏதேனும் ஏற்பாட்டில், "ஆளுநர் சபை" அல்லது நிறுவகத்தின் ஆளுநர் சபையைக் குறிக்கும் "சபை" என்ற சொற்கள் எங்கெங்கு வருகின்றனவோ அங்கெல்லாம் அச் சொற்களுக்குப் பதிலாக முறையே "ஆளும் பேரவை" அல்லது "பேரவை" என்ற சொற்கள் இடப்படல் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்தைத் திருத்துதல்.

14. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.